# விகிதம் மற்றும் விகித சமம்

1. விடுபட்ட எண்களை நிரப்புக.

(i) 3 : 5 : : ☐ : 20

(ii) ☐ : 24 : : 3 : 8

(iii) 5 : ☐ : : 10 : 8 : : 15 : ☐

(iv) 12 : ☐ = ☐ : 4 = 8 : 16

2. சரியா, தவறா எனக் கூறுக.

(i) 7 நபர்களுக்கும் 49 நபர்களுக்கும் உள்ள விகிதமும், 11 கிகி எடைக்கும் 88 கிகி எடைக்கும் உள்ள விகிதமும் விகித சமத்தை அமைக்கும்.

(ii) 10 நூல்களுக்கும் 15 நூல்களுக்கும் உள்ள விகிதமும், 3 நூல்களுக்கும் 15 நூல்களுக்கும் உள்ள விகிதமும் விகித சமத்தை அமைக்கும்.

(iii) 40 நூல்களின் எடை 8 கிகி எனில், 15 நூல்களின் எடை 3 கிகி.

(iv) சீரான வேகத்தில், ஒரு மகிழுந்து 3 மணி நேரத்தில் 90 கிமீ எனப் பயணிக்கிறது. அதே வேகத்தில், 5 மணி நேரத்தில் அது 140கிமீ தொலைவைப் பயணிக்கும்.

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) 3 எழுதுகோல்களின் விலை ₹18 எனில், 5 எழுதுகோல்களின் விலை __________.

(ii) 15 நாள்களில் கார்குழலி ₹1800 ஐ வருமானமாகப் பெறுகிறார் எனில், ₹3000 ஐ __________ நாள்களில் வருமானமாகப் பெறுவார்.

LIVEWORKSHEETS